




# "ஆஹா... கூட்டம் கூட்டமா வாராங்களே..!"


குவிந்த வாகனங்கள்...

தமிழகத்தில் 'டாப்ஸ்லிப்' வனப் பகுதியில் நடக்கும் 'யானைப் பொங்கல்' பிரபலமானது. இந்த வருடம் நடந்த யானைப் பொங்கல் விழாவுக்கு 500-க்கும் மேற்பட்ட வாகனங்களில் பொதுமக்கள் குவிய... காட்டுக்குள் கடுமையான டிராஃபிக் ஜாம்!

அதனையடுத்து,'யானைப் பொங்கல் விழாவுக்கு வரும் வாகனங்களால் காட்டின் சுற்றுச்சூழல் கெடுகிறது; விலங்குகளின் நடமாட்டமும் தடைபடுகிறது. ஆகவே, இந்த யானைப் பொங்கல் கொண்டாட்டத்தையே நிறுத்த வேண்டும்!' என்ற குமுறல் சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடம் வலுத்திருக்கிறது!

"கோவை மாவட்டத்துல டாப்ஸ்லிப் ஏரியா அமைச்சிருக்குற 'இந்திராகாந்தி வனவிலங்கு சரணாலயம் மற்றும் தேசிய பூங்கா'தான் வன விலங்குகளுக்குப் பாதுகாப்பான இடம்னு வனத் துறை சொல்லுது. ஆனா, நடக்குற சம்பவங்களைப் பார்த்தா... அங்கேயும் விலங்குகளுக்கு சரியான பாதுகாப்பு இல்லையோன்னு தோணுது..." என்று வருத்தத்துடன் ஆரம்பித்தார் சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன்.


யோகநாதன்

"யானைக் கூட்டங்கள்ல இருந்து தனிச்சு விடப்படுற யானையை டாப்ஸ்லிப்ல பாதுகாப்பா வளர்த்துட்டு வர்றாங்க வனத் துறையினர். அந்த யானைக்கு 'கும்கி'ன்னு பெயர் வெச்சு, காட்டு யானை கிராமங்களுக்குள்ள வந்துட்டா அவற்றை விரட்டுற வேலையை பழக்கப்படுத்தப்பட்ட இந்த 'கும்கி' யானைகளின் உதவியோடு செய்றாங்க. இது நல்ல விஷயம்தான். ஆனா, அதே நேரத்துல ஒவ்வொரு வருஷமும் கும்கி யானைகளை வெச்சு பொங்கல் கொண்டாடுறோம்ங்கிற பேர்ல, யானைகளை சித்ரவதை செய்யுறதைத்தான் எங்களால ஏத்துக்க முடியல. கடந்த 16-ம் தேதியன்னிக்கு, டாப் ஸ்லிப்ல யானைப் பொங்கல் விழாவைப் பாக்குறதுக்கு ஏகப்பட்ட மக்கள்... ஏகப்பட்ட வாகனங்கள்... இதனால டிராஃபிக் ஜாம்! வாகனங்கள்ல இருந்து வர்ற காதைக் கிழிக்கிற ஹாரன் சத்தம் வன விலங்குகளை அலற வைச்சிருக்கு. அன்னிக்கு அந்த ஏரியாவுல பிளாஸ்டிக் பயன்படுத்துனவங்க அதிகம். இது மாதிரி விலங்குகளுக்கு பல வகையிலும் வனத் துறை தொந்தரவு கொடுக்குறதை ஏத்துக்க முடியாது.

டாப்ஸ்லிப் ஏரியாவுக்கு பக்கத்துலதான் கேரள அரசோட கட்டுப்பாட்டுல இருக்குற பரம்பிக்குளம் வனப்பகுதி இருக்கு. கேரள வனத் துறை காடுகளையும், அங்க இருக்குற விலங்குகளையும் காப்பாத்துறதுக்கு உசுரைக் கொடுக்குது. பரம்பிக்குளத்துக்குள்ள போகணும்னா, 30 வாகனத்துக்கு மேல அனுமதிக்காது கேரள வனத் துறை. 31-வது வாகனமா அமைச்சரோ, கலெக்டரோ வந்தாக்கூட அவங்களுக்கு அனுமதி கிடையாது. அந்தளவுக்கு ஸ்ட்ரிக்ட்! சமீபகாலமா பொதுமக்களோட வாகனத்தையும் உள்ளே அனுமதிக்குறதில்லை. வனத் துறை வேன்லதான் காட்டுக்குள்ள சுத்திப் பார்க்க முடியும். அந்த காட்டுக்குள்ள வாழுற மலைவாழ் மக்களை பக்காவா டிரெய்னிங் பண்ணி, கைடு மாதிரி மாத்தி வெச்சிருக்காங்க. அந்த கைடுகளுக்கு காட்டுக்குள்ள எல்லா இடங்களும் அத்துப்படி.


தங்கராஜ் பன்னீர்செல்வம்



## அலறும் டாப்சிலிப் மிருகங்கள்

கேரளாவுல காட்டை வெச்சு காசு பார்த்தாலும், அந்தக் காடுகளை பராமரிக்கிறதுக்கு அந்தக் காசை பயன்படுத்துறாங்க. பரம்பிக்குளம் வன விலங்கு சரணாலயத்துக்குள்ள ஒரு பிளாஸ்டிக் குப்பையைக்கூட பார்க்க முடியாது. அப்படி கண்டுபிடிச்சுக் கொடுத்தா, வனத் துறைகிட்ட இருந்து 100 ரூபா பரிசா வாங்கிக்கலாம்! அதே நேரத்துல வேன்ல போறவங்க தண்ணி பாட்டிலையோ, பிளாஸ்டிக் குப்பையையோ காட்டுக்குள்ள போட்டுட்டா... வனத் துறைகிட்ட அபராதம் கட்டியாகணும். அங்க கட்டுக்கோப்பாவும், கடுமையாவும் இருக்குறதாலதான், சர்வசாதாரணமா சுதந்திரமா வாகனங்கள் செல்லும் பாதை வரை விலங்குகள் நடமாடுது.

டாப்ஸ்லிப்பைத் தாண்டித்தான், பரம்பிக்குளத்துக்குள்ள போக முடியும். ஆனா, ரெண்டு ஏரியாவுலேயும் வனத் துறையோட செயல்பாடு எப்படி இருக்குன்னு அங்க அடிக்கடி போயிட்டு இருக்குற மக்களுக்குத் தெரியும்.


யானைப் பொங்கல்

இப்போ பிக்னிக் ஸ்பாட் மாதிரி மாறிட்டு வர்ற டாப்ஸ்லிப் ஏரியாவையும் கன்ட்ரோல்ல வெச்சுக்க முடியும். அதுக்கு முதல் கட்டமா... சேத்துமடை செக் போஸ்ட்டுல வெச்சு, வாகனங்களை கடுமையா செக் பண்ணணும். பிளாஸ்டிக் பைகளை, மது வகைகளை வெச்சிருந்தாலும் உடனடியா பறிமுதல் செஞ்சிடணும். அதையும் மீறி காட்டுக்குள்ள ட்ரிங்க்ஸ் சாப்பிட்டா... கடுமையான நடவடிக்கை எடுக்கணும். ஐம்பது நூறுக்கு ஆசைப்பட்டு, காடுகளை அசுத்தமாக்க ஒரு போதும் வனத் துறை அனுமதிக்கக் கூடாது!" என்றார் காட்டமாக.

இது தொடர்பாக டாப் ஸ்லிப் பகுதி வனச்சரகர் தங்கராஜ் பன்னீர்செல்வத்திடம் பேசியபோது, "வன விலங்குகளைப் பத்தி விழிப்பு உணர்வு ஏற்படுத்துறதுக்குத்தான் யானைப் பொங்கல் நடத்துறோம். சமீபத்துல நடந்த பொங்கல் விழாவுலகூட 3,000 பேர் கலந்துக்கிட்டு, யானைகளைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டாங்க. இந்த விழாவுக்கு அதிகமான மக்கள் கார்ல வந்ததால, டிராஃபிக் ஜாம் ஏற்பட்டது உண்மைதான். மத்தபடி, பொதுமக்கள் யாரும் காடுகளை அசுத்தப்படுத்தலை. அதுக்கு நாங்களும் அனுமதிக்கலை. பரம்பிக்குளம் பகுதியில வனச்சுற்றுலாவை வர்த்தக நோக்கத்துல கேரளா நடத்திக்கிட்டு இருக்கு. ஆனா, பாமர மக்கள் கூட பணமே இல்லாம டாப்ஸ்லிப் ஏரியாவுக்கு வந்து ரசிப்பதோடு, இயற்கையின் சிறப்பை உணர்ந்துகொண்டு போற நிலைமை இன்னமும் இருக்கு. மக்களின் வரவால், வனவிலங்குகளுக்கு எந்த பாதிப்பும் வந்தது கிடையாது. இருப்பினும், குறிப்பிட்ட அளவு மக்களை மட்டும் அனுமதிக்கிறதைப் பத்தி உயரதிகாரிகளோட சேர்ந்து ஆலோசிப்போம். வனவளம் மற்றும் வனவிலங்குகளை எல்லோரையும் விட எங்கள் துறையினர் அதிக அக்கறையோடு நேசிக்கிறோம்!" என்றார்.

- அகப்புராஜ்

படங்கள்: தி.விஜய்